2017 ஜூன் 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மஸ்தான், தொகுப்பு வீடுகள் கட்டுவது சம்பந்தமான கேள்வியைக் கேளுங்கள். உங்களுடைய தொகுதியில் ஏதாவது தொகுப்பு வீடுகள் பழுதடைந்திருந்தால் அதுசம்பந்தமான கேள்வியைக் கேட்டால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். உள்ளாட்சி சம்பந்தமான வினாவில் நீங்கள் வேறு கேள்வியைக் கேட்டால் எப்படி?*

திரு. கே.எஸ். மஸ்தான்: *இதுவும் உள்ளாட்சித் துறைக்கு சம்பந்தப்பட்ட கேள்வியாகும். குடிநீர் சம்பந்தப்பட்ட கேள்விதான். வேறு ஒன்றும் இல்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குடிநீர் சம்பந்தமான கேள்வியென்றால் கேளுங்கள். உங்களுக்கு பேச வாய்ப்பு தந்திருக்கிறேன், அதை நீங்கள் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.*

திரு. கே.எஸ். மஸ்தான்: *தென்பெண்ணையாற்றில் 3 கிணறுகள் இருக்கின்றன. அதில் இரண்டு கிணறுகளில் இப்போது தண்ணீர் இல்லாமல் இருக்கின்ற நிலை இருக்கிறது. எனவே, நகரத்தில் உள்ள குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க செஞ்சி நகரத்திலுள்ள 'B' ஏரியில் ஒரு திறந்தவெளிக் கிணறும், பொன்பத்தி ஏரியில் ஒரு திறந்தவெளிக் கிணறும் மற்றும் தென்பெண்ணையாற்றில் ஒரு கிணறும் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மஸ்தான், இதுசம்பந்தமான கேள்வியை தனியாகக் கேளுங்கள். வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கனகராஜ், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

14—

நீதிமன்றம் அமைத்தல்

***4666—திரு. ஆர். கனகராஜ்:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூலூர் தொகுதியில் நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்ற சூலூர் தொகுதியில், புதிய நீதிமன்றம் அமைப்பது தொடர்பான கேள்விக்கு, 29–4–2017 அன்றே அவர் கோரியபடி இரண்டு நீதிமன்றங்கள் செயல்பாட்டுக்கு வந்திருக்கின்றன என்ற பதிலை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கனகராஜ் அவர்கள்.*

திரு. ஆர். கனகராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றம் அமைத்துக் கொடுத்த மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக்கும், தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், எங்களுடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், என்னுடைய சூலூர் சட்டமன்றத் தொகுதி மக்களுடைய கோரிக்கையை ஏற்று, நிறைவேற்றிக் கொடுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார் அவர்கள்.*

திரு. ஏ.பி. நந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய அணைக்கட்டு தொகுதி தனி தாலுகாவாக அறிவிக்கப்பட்டும், அணைக்கட்டு தொகுதியிலுள்ள மக்கள் நீதிமன்றம் செல்லவேண்டுமென்றால் வேலூரில் இருக்கின்ற நீதிமன்றத்திற்குச் செல்லவேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, அணைக்கட்டு தொகுதியிலே ஒரு நீதிமன்றம் இந்த அரசால் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.*

2017 ஜூன் 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற வட்டங்களிலே நீதிமன்றங்கள் இல்லாத வட்டங்களை எல்லாம் கண்டறிந்து, புதிய நீதிமன்றங்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற உயர் நீதிமன்றத்தின் பரிந்துரையை ஏற்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஒரு சிறப்பு ஆணையை வெளியிட்டிருக்கிறார்கள். அதன்மூலம் தமிழகத்தில் நீதிமன்றங்கள் இல்லாத 51 வட்டங்களில் சிறப்பு குற்றவியல் நீதிமன்றங்கள் அமைப்பதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அந்த ஆணையின்படி, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுள்ள அணைக்கட்டு தொகுதிக்கும் நீதிமன்றம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு அவர்கள்.*

திரு. அ. ராமு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமலும் இருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, குன்னூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கோத்தகிரியில் சொந்த நீதிமன்றக் கட்டடம் அமைத்துத் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, பதவியிலிருந்த 6 ஆண்டு காலத்திலே நீதித் துறைக்கு இதுவரை எந்த அரசும் செய்திராத அளவுக்கு பல்வேறு பணிகளை நிறைவேற்றியிருக்கின்றது. குறிப்பாக, கடந்த 6 ஆண்டு காலத்தில் மட்டும் 659 கோடி ரூபாய் அளவுக்கு நீதித் துறைக்கு ஒதுக்கிய அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்ற புதிய நீதிமன்றம் அமைப்பது தொடர்பாக உயர் நீதிமன்றத்திடமிருந்து பரிந்துரை வரப்பெற்றால், உடனடியாக அம்மா அவர்களுடைய அரசு கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*